Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 95

வியாழக்கிழமை
29 பெப்ரவரி 2024

மாசி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இப்பிடியே வழக்கும், கோட்டும் எண்டு திரியுங்கோ சனங்களை எட்டியும் பாராதையுங்கோ"

## இந்திய - இலங்கை அரசுகளின் சதி

# சாந்தன் சாவு!

## பூதவுடல் இன்று வரும்



சென்னை, பெப்ரவரி 29

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து விடுதலைசெய்யப்பட்டும், இந்தியாவால் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தில்லையம்பலம் சாந்தன் நேற்று உயிரிழந்தார். விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட விருந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் இரவு மாரடைப்பு ஏற்பட்டு, நேற்று புதன் கிழமை காலை அவரது உயிர்பிரிந்துள்ளது.

11

## நளினி, பேரறிவாளன் சாந்தனுக்கு அஞ்சலி!

சென்னை, பெப்.29

இந்திய அரசால் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் சென்னை ராஜீவ்காந்தி அரச மருத்துவமனையில் உயிரிழந்த சாந்தனின் உடல் நளினியின் சட்டத்தரணி புகழேந்தியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

11

## இந்தியாவுக்கும் – இலங்கைக்கும் சாந்தனின் உயிரிழப்பில் பங்கு!

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.29

சாந்தனின் உயிரிழப்புக்கு இந்திய - இலங்கை அரசாங்கங்களும், தமிழ்த் தலைமைகளும் பொறுப்பேற்கவேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

11

## தமிழரசுக் கட்சி வழக்குகள் யாழ்., திருமலையில் இன்று!

யாழ்ப்பாணம், பெப்.29

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை மாநாடு, நிர்வாகத் தெரிவு என்பவற்றுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று மற்றும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

11

## உடைமையில் போதை: பெண் கைது

கிளிநொச்சி, பெப்.29

ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர்

11



## கொன்சியூல் ஜெனரல் முரளி வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப்.29

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக கொன்சியூல் ஜெனரல் சாய் முரளி, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

11

## அரசியல் கூட்டணிக்கு தமிழ்த் தரப்புடன் பேச்சு

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.29

ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணி அமைத்துக் களமிறங்குவது தொடர்பில் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார

11

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

பக்.11

## அதிகாரப் பகிர்வின்றி அபிவிருத்தி நடக்காது

### இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இந்தியாவில் வைத்துத் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.29

நாட்டின் தேசியவாதம் 'சில சமூகங்களை' ஆயுதப்போராட்டத்துக்குள் தள்ளியது. அதிகாரப் பகிர்வின்றி இலங்கையை அபிவிருத்தி செய்யமுடியாது என்று இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இந்தியாவில்

11

## வெளிமாவட்டங்களுக்கான தனியார் பஸ் சேவை நிறுத்தம்: பயணிகள் பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம், பெப்.29

யாழ்ப்பாணத்தில் இருந்து சேவையில் ஈடுபடும் நெடுந்தூர பஸ்கள் நேற்றுச் சேவையில் ஈடுபடவில்லை. முறையான பஸ் தரிப்பிடம் இல்லாததால் இன்று (நேற்று) முதல் தனியார் பஸ் சேவைகள் நடைபெறாது என்று வடஇலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வேறு மாவட்டங்களுக்குச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள்,

12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பல்கலை ஊழியர்கள் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 29

**ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களால் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

அரசபல்கலைக்கழகங்களில் பணியாற்றும் கல்வி சாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்ட போதிலும் இன்றளவில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அசமந்தப் போக்குக்கு எதிராகவும், ஊழியர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுமே நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக இன்று வியாழக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-125-66)

## மாவாவுடன் கைதான இளைஞர் மறியலில்!

யாழ்., பெப். 29

சங்கானையில் மாவாவுடன் கைதான இளைஞரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சங்கானைப் பகுதியில் மாவா பாக்கை இளைஞர் ஒருவர் உடைமையில் வைத்துள்ளார் என்று கிடைத்த தகவலுக்கு அமைய அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார், 34 வயதுடைய இளைஞரைக் கைதுசெய்ததுடன் அவரிடம் இருந்து 15 கிராம் மாவா பாக்கையும் மீட்டனர். அந்த நபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. (ம-125)

## பாரம்பரியப் பொருள்களை கோருகிறது மாவட்டச் செயலகம்

யாழ்ப்பாணம், பெப். 29

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஆவணக்காட்சிப் பெட்டகத்துக்கான பாரம்பரியப் பொருள்களை வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

மாவட்டச் செயலக ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அழிவடைந்து செல்லும் மரபுரிமைசார் பாரம்பரியங்களைப் பாதுகாத்து. அழிவும் திரிபுமின்றி அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் வரலாற்றுக்கடமையை மேற்கொள்ளும் முகமாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் ஆவணக்காட்சிப் பெட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாரம்பரியப்பொருள்களை வழங்கியவர்கள் தொடர்பான விவரங்கள் ஆவணப்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஒ-27)

## மாணவன் மீது தாக்குதல் நடவடிக்கைக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 29

நெல்லியடி மத்திய கல்லூரியில் தரம் - 6இல் இணைந்து கொண்டபுதுமுக மாணவன்மீது, தரம்-10 மாணவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவன் மற்றும் தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறப்படும் மாணவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட மாணவனுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கும் வரை ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்படும் அபயம் பிரிவினால் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். (ஒ-27)

## நீதிமன்றம் திறப்பு!

யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில்மேலதிக நீதிவான் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி டெனிசாந்தன் சூசைதாசன் நாடா வெட்டி நீதிமன்ற நடவடிக்கையை ஆரம்பித்துவைத்தார். (ம-23)

## மனிதனை ஒளிர்விக்கின்ற உண்மை ஒளி இறைவன்




மாறுகின்ற உலகில் மாற்றம் தேடும் மனிதனின் இன்றைய நிலையை உற்றுநோக்கின் மனித சமுதாயம் இருட்டுக்குள்ளே குருட்டாட்டம் ஆடுவதுபோல் பயணிக்கிறதை நாம் காணமுடிகிறது. 'இருளே எம்மிருப்பா, ஒளியே வராதா, மரணம்தான் முடிவா, விடிவே கிடையாதா?' என பாடிப்புலம்பும் மனித உள்ளங்களையே நாளும் நாம் சந்திக்கின்றோம். உள்ளத்திலேயும், உலகத்திலேயும் ஒளியிருந்தால்தான் மனிதவாழ்விலே ஒரு தெளிவிருக்கும் என்பது ஆன்றோர்களின் நம்பிக்கை. ஆனால் சிலர் இருளை விரும்பி, அதன் பயங்கரத்துக்குள் வாழ்ந்து, பிறரையும் அப்பாதாளத்துக்குள் இழுத்துச்செல்லும் துர்ப்பாக்கிய நிலையும் இவ்வுலகிலும், எம்சமுதாயத்திலும் இல்லாமலில்லை. மனித வாழ்வில் ஏற்றப்படும் ஒளியைத் தடுப்பதும் இருளைக் கொடுப்பதும் மனிதர்களே. இறைவனே உண்மையான ஒளி. எனவே, இறைமக்களாகிய நாம் மண்ணோடு மண்ணாக மக்கிப்போகின்ற இவ்வுலக செல்வங்களில் ஆர்வம் கொள்ளாமல், மேன்மையானவற்றையும், மேலுலகு சார்ந்தவற்றையும், நன்மையானவற்றையும், நல்லோர்க்குரியதையும், உண்மையானவற்றையும், தூய்மையானவற்றையும் வாழ்வில் வெளிப்படுத்தி, கடவுளின் ஒளி எம்மில் சுடர்பரப்ப வழியமைக்கவேண்டும். 'ஒளி அழுக்குகளின் வழியே கடந்து சென்றாலும் அழுக்கடைவதில்லை' என்று கூறுவார் புனித அகுஸ்தீனார். பாவம் நிறைந்த உலகில், பயணிக்கும் நாம் பாவம் போக்கி, வாழ்வில் இருள் அகற்றி எம் வாழ்வை நிறைவாழ்வாக வாழும் அதேவேளையில் பிறரையும் ஒளியின் வாழ்வுக்கு அழைத்துச் செல்வது எமது கடமையாகும். 'அக்கினிக் குஞ்சொன்று கண்டேன். அதை அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன். வெந்து தணிந்தது காடு' என்று பாடும் பாரதியைப் போல தீமையை அழித்து உலகில் நன்மையை விதைக்க நாம் ஒருபோதும் பின்னிற்கக்கூடாது. வாழ்வில் ஒளியேற்றி, இறையுறவில் என்றும் சங்கமிக்க இறைவனை நாடுவோம். அவரே எம்மில் சுடர்விடும் உண்மையான ஒளியாவார்.

**அருட்தந்தை றமேஸ் அ.ம.தி**

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்., பெப். 29

மானிப்பாய், காக்கைதீவுப் பகுதியில் கசிப்புடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த நபரே கைது செய்யப்பட்டவராவார். சந்தேகத்துக்கு இடமான வகையில் நடமாடிய அவரைச் சோதனைக்கு உட்படுத்தியபோது அவர் கைதுசெய்யப்பட்டார் என்றும் உடைமையில் இருந்து 750 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-125)

## படகுகளையும் மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

### தமிழக முதல்வரிடம் மீனவர்கள் நேரில் கோரிக்கை

இராமேஸ்வரம், பெப். 29

இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதுடன் விசைப்படகுகளையும் விடுவிக்க தமிழக முதல்வர், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்குப் பரிந்துரை செய்து இலங்கை அரசிடம் பேச்சு நடத்த வேண்டும் என இராமேஸ்வரம் மீனவர்கள், தமிழக முதலமைச்சர் ஸ்டாலினிடம் நேரில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இது தொடர்பில் இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்ததாவது:-

இராமேஸ்வரம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கும்போது இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படுவதும், சிறைப்பிடிக்கப்படுவதும் தொடர்வாடிக்கை நிகழ்வாக நடைபெற்று வருகின்றது. தமிழக முதலமைச்சர், மத்திய அரசுக்கு அழுத்தம் தெரிவித்து இருநாட்டு மீனவர்களும் சுமுகமான முறையில் மீன்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மேலும் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்களுக்கு மாற்றுத்தொழிலான நீண்ட நாள் தங்கி மீன் பிடிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து தரவேண்டும் என்று கோரியுள்ளோம் - என்றனர். (ஒ-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கல்லூரி விவகாரம்: அமைச்சர் டக்ளஸ் அரசியல்

இப்படிச் சொல்கிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், பெப். 29

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் நியமனத்தில் அமைச்சரின் தேவையற்ற அரசியல் தலையீடு காணப்படுவது, வடக்குக் கல்விக் கட்டமைப்புக்கு கறையான நிகழ்வு என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அதிபர் நியமனம் தொடர்பில் சர்ச்சைகள் நிலவி வருகின்றன. மத்திய கல்லூரி தேசியப் பாடசாலையாகும். அதிபர் நியமனங்களை பொதுச்சேவை ஆணைக்குழு ஊடாக கல்வி அமைச்சே வழங்கும். புதிய அதிபர் நியமிக்கப்பட்டு அவர் பதவியேற்ற போதிலும், முன்னர் பதில் அதிபராக இருந்தவர் பொறுப்புகளைக் கையளிக்காமல் இழுத்தடித்து வருகின்றார். புதிய அதிபரைப் பதவியேற்கவிடமால் முன்னர் பதில் அதிபராக இருந்தவரை அதிபராக்கும் முயற்சியின் பின்னணியில் அமைச்சர் ஒருவர் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிபர் நியமன பொறிமுறைகளைக் கேள்விக்குட்படுத்தும் முகமாகச் செயற்பாடுகள் நடைபெறுவதுடன், சாதியம் உள்ளிட்ட சில விடயங்களையும் மாணவர்கள் மத்தியில் ஊட்ட முயல்கின்றனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை, அமைச்சர் பாடசாலைக்கு நேரில் சென்று முன்னர் இருந்த பதில் அதிபரே தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றுவார் என புதிய அதிபருக்குக் கடிதத்தைக் காட்டியுள்ளார் என அறிகிறோம். ஓர் அமைச்சர் பாடசாலைக்கு நேரில் சென்று பாடசாலை விடயங்களில் தலையீடு செய்வது விரும்பத்தக்க செயல் இல்லை. கல்வி நடவடிக்கைகளில் அரசியல் தலையீடுகள் இருக்கக் கூடாது என்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-20)

## காலாவதிப் பொருள்கள்: 62, 000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், பெப். 29

காலாவதியான பொருள்களை விற்றவருக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் 62 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சு.குணசாந்தன் தலைமையில் வியாபார நிலையங்கள் மீது திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது காலாவதியான பிஸ்கட், சோடா மற்றும் வண்டு பிடித்த கடலை ஆகியவற்றை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தி வைத்திருந்தமை கண்டறியப்பட்டது. வர்த்தக நிலையத்திலிருந்து 20 வகையான உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் அவை பாரப்படுத்தப்பட்டன. வழக்கு விசாரணையின்போது கடையின் உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 62 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஒ-159)

## வெப்பநிலை உயர்வடைவு

நாட்டின் பலபகுதிகளில் வெப்பநிலை இன்றும் தொடர்ந்து அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மனித உடலால் உணரப்படும் வெப்பமானது வடமேற்கு, மேற்கு மற்றும் தென் மாகாணங்களிலும் இரத்தினபுரி மாவட்டத்தின் சில இடங்களில் கவனம் செலுத்தவேண்டிய மட்டத்தில் இருக்கும். ஆதலால், பொதுமக்கள் போதுமான அளவு தண்ணீர் அருந்துதல், முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய்வெடுத்தல், கடுமையான வெளிப்புறச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றவேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளது. (ம)

## கொழும்பில் பஸில் கம்பஹாவில் தம்மிக்க

கொழும்பு, பெப். 29

அடுத்த பொதுத்தேர்தலில் பஸில் ராஜபக்ச கொழும்பு மாவட்டத்திலும், தம்மிக்க பெரேரா கம்பஹா மாவட்டத்திலும் களமிறங்குவார்கள் என்று ராஜபக்ச குடும்ப உறுப்பினரான உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் உதயங்க வீரதுங்க தெரிவித்ததாவது:

'அடுத்தது பொதுத்தேர்தல் என்பது உறுதி. அந்த உறுதிமொழியை பஸில் பெற்றுவிட்டார். அந்தத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ச குருநாகல் மாவட்டத்தில் களமிறங்கமாட்டார். அவருக்குப் பதிலாக அவரின் மகன் ரோஹித ராஜபக்ச போட்டியிடுவார். போட்டியிடுவது தொடர்பில் மஹிந்த இன்னும் தீர்மானிக்கவில்லை. சில்வேளை சமல் ராஜபக்சவும் போட்டியிடாமல் இருக்கக்கூடும்.' - என்றார். (ம-44)

## ஒன்றுக்கு மேற்பட்டு எல்லைதாண்டின் சிறை

2018ஆம் ஆண்டு அரசியல் யாப்புச் சட்டத்துக்கமைய ஒன்றுக்கு மேற்பட்ட தடவை எல்லை தாண்டி வருபவர்களைத் தண்டனைக்குட்படுத்த முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (ச-27)

## துறைமுகநகர் கட்டுமானம்: சட்டவிரோதமாகவே மணல்

கொழும்பு, பெப். 29

சீனாவைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரர், கொழும்புத்துறைமுக நகர் கட்டுமானப் பணிகளுக்கு, துறைமுகநகர்ப் பகுதியிலுள்ள மணலை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதாக முன்னிலை சோஷலிசக் கட்சியின் பேச்சாளர் புபுது ஜெயவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

80 மில்லியன் ரூபா பெறுமதியான 4 ஆயிரம் கியூப் மணல் சட்டவிரோதமான முறையில் கொழும்புத்துறைமுகக் கட்டட நிர்மாணப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. கடற்கரை மணலைப் பாவித்து கட்டடங்களைக் கட்டும்போது அவற்றின் தரம் பற்றியும் சிந்திக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## பட்சி தினம் தெரியுமோ?

**யாழ்ப்பாணம் ரவுனுக்கு 'மத்தியில' உள்ள அந்தப் பெரிய பள்ளிக்கூடத்துப் பிரச்சினை பத்தியெரியத் தொடங்கிட்டுது. ஆளாளுக்கு மாறி மாறி பிரஸ்மீட் வைக்கிறதும், அறிக்கையள் விடுறதும் , தங்கட கன்னைக்கு ஆக்களைச் சேர்க்கிறதுமா பெரும்பாடு படுகினம். பள்ளிக்கூட விசயங்களுக்குள்ள அரசியல் எண்ட விசம் கலந்தால் என்ன நடக்குமெண்டதுக்கு இது நல்ல உதாரணம்.**

**முந்தியும் ஒருக்கா உந்தப் பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில இருக்கிற மகளிர் கல்லூரியிலையும் இதேமாதிரி அதிபர் நியமனத்துக்குள்ள இதே அமைச்சர்தான் பூந்து விளையாடினவர். நேர்வழியில வந்த அதிபரை ஓரம் கட்டிப்போட்டு, தன்ர சொல்லுக்கேக்கிற வேற ஒரு ஆளைப் பிரின்சிப்பலாப் போடுறதுக்கு அமைச்சர் கடுமையாக் குத்திமுறிஞ்சவர். ஆனால் என்னதான் அவர் அரசியலில மேலிடத்துச் செல்வாக்குக்கொண்டவரா இருந்தாலும், நீதிக்கு முன்னால ஒண்டும் செய்யேலாமல் போட்டுது. அந்தப் பிரின்சிப்பல் துணிவா நிண்டு போராடினதாலதான் அதுக்குப் பிறகு அந்தப் பள்ளிக்கூடத்தின்ர தரம் இன்னும் கூடி, இப்ப அங்க ஏ.எல். எக்ஸாமில '3 ஏ', ஓ.எல்.எக்ஸாமில '9 ஏ' எண்டு ஒரே 'ஏ' மழையா ரிசல்ட் கொட்டிக்கொண்டிருக்கு. எந்த அதிபர் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு வரக்கூடாது எண்டு அமைச்சர் ஒற்றைக்காலில நிண்டாரோ , அந்த அதிபர்தான் பள்ளிக்கூடத்தை இந்தளவுக்கு உயர்த்தினா. அதுக்கு முதல் பள்ளிக்கூடம் திறமான ரிசல்ட் எடுக்கேல்லையோ எண்டும் சிலர் கேக்கலாம். இல்லையெண்டு சொல்லேலை. ஆனால் அந்த அதிபர் இன்னொரு கட்டத்துக்கு அந்தப் பள்ளிக்கூடத்தைக் கொண்டு போனவா எண்டதும் உண்மைதான். ஒருவேளை அமைச்சரின்ர பிடிவாதத்தால அந்த பிரின்சிப்பல் வராட்டி , அந்தப்பள்ளிக்கூடம் நல்லதொரு அதிபரை மிஸ் பண்ணியிருக்குமெல்லோ.**

**அதேமாதிரி தங்கட பள்ளிக்கூடத்துக்கும் , நேர்வழியிலதான் அதிபர் வரவேணும் எண்டதுதான் இப்ப பிரச்சினை நடக்கிற பள்ளிக்கூடக்காரரின்ர நிலையும். ஆனால் அதுக்குள்ள அமைச்சர் புகுந்து ஆட்டத்தைக் குழப்பிற மாதிரி கன வேலையள் செய்திருக்கிறார். முக்கியமா இதுவரை இயங்கின பழைய மாணவர் சங்கத்தைக் கூட குழப்பியடிச்சு, தன்ர ஆக்களை அதில இருந்து ரிசைன் பண்ண வைச்சு, இப்ப அந்தப் பழைய மாணவர் சங்கத்தையே இல்லாமலாக்கிட்டார் அமைச்சர். அந்தக் கதையைச் சொல்லிறதெண்டால் அனுமர் வால் மாதிரி நீண்டு கொண்டே போகும். அந்தப் பழைய மாணவர் சங்கத்தை இல்லாமல் செய்ததுக்கு காரணமே, இப்பிடி தனிக்கச்சேரியை அமைச்சர் பள்ளிக்கூடத்தில வைக்கத் தானாம். பழைய மாணவர் சங்கம் ஒழுங்கா இயங்கி இருந்தால், இப்பிடியெல்லாம் நடக்க இடங்குடுக்க மாட்டினமெல்லோ. அப்பிடியிருந்தும் அமைச்சர் தான் நினைச்சபடி, வேற பள்ளிக்கூடத்தில இருந்து கொண்டந்தவரை அதிபராப் போடுறதுக்கு கடும் எதிர்ப்பு வந்திட்டுது. அதாலதான் ஆர்ப்பாட்டம், அறிக்கை அது இதெண்டு கனக்க வித்தையள் காட்டுப்படுகுது. ஆனால் பாவம், அந்தப் பள்ளிக்கூடத்துப் பிள்ளையளின்ர படிப்பு இந்த அரசியல் குறளி வித்தையளால பாழாப் போய்க்கொண்டிருக்கு. அதையாவது ஆரும் கணக்கில எடுத்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமாட்டினமோ?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணகைபுரத்தில் பூசணி அறுவடை

**கிளிநொச்சி, பெப். 29**

**கிளிநொச்சி - கண்ணகைபுரம் விவசாயிகள் மேட்டுப் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ள நிலையில் கூடுதலாக பூசணி அறுவடையில் ஈடுபட்டுள்ளனர்.**

தற்போது அக்கராயன் குளத்தில் இருந்து கண்ணகைபுரம் கிராமத்துக்கு மேட்டுப் பயிர்ச் செய்கைக்காக நீர் திறந்துவிடப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் விவசாயிகள் பூசணி அறுவடையில் ஈடுபட்டுள்ளனர். கடந்த வருடமும் அந்தப் பகுதியில் பூசணிகள் அதிகளவு அறுவடை செய்யப்பட்டன. ஒரு கட்டத்தில் அவற்றை விற்கமுடியாத நிலையும் ஏற்பட்டது. பின்னர், கிளிநொச்சி மாவட்டச் செயலர் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக தென்னிலங்கைக்கு பூசணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ய-13)

# சதுரங்கப் போட்டியோடு எமக்குத் தொடர்பில்லை

## நெல்லியடி சதுரங்கக் கழகம் மறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 29

வடமராட்சியில் அண்மையில் இடம்பெற்ற சதுரங்கத் தொடருக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று நெல்லியடி சதுரங்கக் கழகம் மறுப்புத் தெரிவித்து, உதயனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

வடமராட்சி, நெல்லியடியில் உள்ள சதுரங்கக் கழகம் ஒன்றின் அனுசரணையுடன் தனியார் ஒருவர் நடத்திய சதுரங்கத் தொடரில் ஏற்பட்ட மோசடிகள் மற்றும் குளறுபடிகள் தொடர்பான தகவல்கள் நேற்றுமுன்தினம் பத்திரிகைச் செய்தியில் வெளிவந்திருந்தன.

இதையடுத்து அனுப்பிவைத்துள்ள மறுப்புக் கடிதத்திலேயே நெல்லியடி சதுரங்கக் கழகம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

பெப்ரவரி மாதம் 27ஆம் திகதியன்று தங்களுடைய பத்திரிகையில் வடமராட்சிப் பகுதியில் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டித் தொடரில் விமர்சனம் முன்வைக்கப்பட்டிருந்தது. நெல்லியடியில் இயங்கும் சதுரங்கத்துக்குரிய ஒரேயொரு கழகமும், யாழின் முன்னணிக் கழகங்களிலும் ஒன்று எமது நெல்லியடி சதுரங்கக் கழகம் ஆகும்.

'நெல்லியடியில் உள்ள சதுரங்கக் கழகம் ஒன்றின் அனுசரணையுடன் தனியார் ஒருவரினால் நடத்தப்பட்ட போட்டியில்' என்றவாறான செய்தி வரிகள் நேரடியாக எமது கழகத்தினையே குறிக்கிறது. செய்தியில் குறிப்பிடப்பட் டது போன்று எந்தவொரு போட்டிக்கும் நெல்லியடி சதுரங்கக் கழகத்தினராகிய நாங்கள் இதுவரை அனுசரணை வழங்குவதில்லை. அத்தோடு போட்டிக்கான சதுரங்கப் பலகை மற்றும் கடிகாரத்தினை போட்டி நடத்துபவர்களின் கோரிக்கைக்கு அமைய வாடகை அடிப்படையில் வழங்கியிருந்தோம். இந்த அடிப்படையில் தங்களுடைய செய்தியில் நெல்லியடி சதுரங்கக் கழகத்தினை பற்றிக் கூறப்பட்ட விடயங்களை முழுமையாக மறுதலிக்கிறோம் - என்றுள்ளது.

### ஆசிரியர் குறிப்பு:

*வடமராட்சியில் இடம்பெற்ற சதுரங்கத் தொடர், தொடர்பான மோசடிகள் பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அது தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் தன்னிலை விளக்கங்கள் என்பவற்றை வழங்கியமைக்காக நெல்லியடி சதுரங்கக் கழகத்தை 'உதயன்' பாராட்டுகின்றான். ஆனால், சமூக வலைத்தளங்களில், நெல்லியடி சதுரங்கக் கழகத்தின் அனுசரணையில், தனியார் ஒருவரால் இந்தத் தொடர் நடத்தப்படுவதாகவே விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அந்த விளம்பரங்களின் அடிப்படையில் நெல்லியடி சதுரங்கக் கழகத்தின் மீதான நம்பிக்கையால்தான் பெற்றோர் அந்தத் தொடரில் தமது பிள்ளைகளை பங்குபற்ற வைத்தனரே அன்றி தனியார் ஒருவர் மீதான நம்பிக்கையால் அல்ல.*

*அத்துடன், தொடரை நடத்துபவர்களின் கோரிக்கைக்கு அமைய போட்டிக்கான உபகரணங்களை வழங்கிய நெல்லியடி சதுரங்கக் கழகம், அப்போதேனும் இந்த மோசடிகள் தொடர்பிலும் தனது பெயர் தவறாக விளம்பரப்படுத்தப்பட்டமை தொடர்பிலும் பகிரங்கமாக ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தியிருந்தால், பெற்றோரையும், மாணவர்களையும் தனியார் ஒருவர் மோசடி செய்வதைத் தவிர்த்திருக்கலாம். ஆதலால், பத்திரிகைக்கு வழங்கிய விளக்கத்தை தொடரை நடத்தியவர்களுக்கு வழங்கி அவர்களைக் கண்டிக்க வேண்டிய அல்லது அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுத்து மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தவேண்டிய பெரும்பொறுப்பு நெல்லியடி சதுரங்கக் கழகத்துக்கு உண்டு.* (ஆ-ர்)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.29

ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம் அரசடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், பெப். 29

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச கலாசாரப்பேரவை மற்றும் கலாசார அதிகாரசபை ஆகியவற்றின் பொதுக்கூட்டம், புதிய நிர்வாகத் தெரிவு என்பன குறித்த பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் வசிக்கின்ற அனைவரையும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (ப)

# மரக்குற்றிகள் கடத்திய 9 பேர் கைது

முல்லைத்தீவு, பெப்.29

மரக்குற்றிகளைக் கடத்திய குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நட்டாங்கண்டல் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, கொம்புவைத்தகுளம் பிரதேசத்தில் வைத்துச் சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மரக்குற்றிகளைக் கடத்தப் பயன்படுத்தப்பட்ட இருசக்கர உழவு இயந்திரங்கள் இரண்டும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று நட்டாங்கண்டல் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-35)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாகும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் சுபச் செலவு ஏற்படும்.

**துலாம்:** அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் சற்று எச்சரிக்கையாக நடந்துகொள்வது அவசியம்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. இடையூறுகள் விலகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**மீனம்:** இன்றைக்கும் எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்பட வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.




தமிழின அழிப்புக்கு நீதிகோரி கடந்த 19ஆம் திகதி பெல்ஜியம் தலைநகர் புரூஸலில் உள்ள ஐரோப்பிய ஒன்றியம் முன்பாக பெல்ஜியம் வாழ் தமிழ் மக்களும், பிரிட்டனில் இருந்து ஜெனிவா நோக்கி சைக்கிள் பயணம் மேற்கொள்வோரும் இணைந்து கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். தமிழ் மக்கள் சார்ந்த நிலைப்பாடு உள்ளடங்கிய மனுவும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அரசுகளை வதைக்கப்போகும் கொலைப்பழி


'காந்திய தேசத்தின்' முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் 32 ஆண்டுகாலம் சிறையிடப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்தவரான சாந்தன் நேற்றுக்காலை காலமாகியுள்ளார். அவர் இயற்கை எய்தினார் என்று சொல்வதை விடவும், இலங்கை - இந்திய அரசாங்கங்களின் திட்டமிட்ட கூட்டு முயற்சியால் 'இயற்கைக்கு முரணான' அதே நேரம் 'ஆதாரப்படுத்தப்பட முடியாத' இறப்பைத் தழுவிக் கொண்டார் என்று குறிப்பிடுவதுதான் இங்கு பொருத்தமா னதாக இருக்கும். "எனது ஆசை எல்லாம் எனது பிள்ளை நல்ல படியாக என்னிடம் வந்து சேரவேண்டும் என்பதுதான். அவனுடன் நான் சிறிது காலம் வாழவேண்டும். அதற்காகத் தான் என் உயிர்க்கூடு ஏங்கிக்கொண்டிருக்கின்றது" என்று கூறிக் காத்திருந்த சாந்தனின் தாயார், இன்று சிந்தும் கண்ணீருக்கு முன்னால், காந்திய தேசமும், சிங்கள பேரினவாத அரசும் மீண்டும் ஒருமுறை அம்மணமாகி யிருக்கின்றன.

2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி சாந்தன் சிறைக்கதவுகளால் - நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட போதிலும், அந்தச் 'சுதந்திரப்பறவையின்' இறக்கைகள், இலங்கை நோக்கி விரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் மீண்டும் மீண்டும் மறுக்கப்பட்டுக் கொண்டேயிருந்தன. சாந்தன் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதால், அவர் சட்டவிரோதக் குடியேற்றத்தின் கீழான ஏற்பாடுகளின் கீழ் அணுகப்பட்டார். மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்ட சிறைவாசத்தின் பின்னான விடுதலைக்குப் பின்னரும் அவருக்குக் கிட்டியதெல்லாம் வேலூர் சிறப்புமுகாம்தான். மறுக்கப்பட்ட மருத்துவம், நெருக்கடியான வாழ்வு, சுகாதார வசதியற்ற வாழ்க்கைமுறை, குறுகிய அறை என தினந்தினம் நோயாளியாக மாறிக்கொண்டிருந்த சாந்தன் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு உள்ளிட்ட நோய்களால் அவதியுற்று நேற்றுக் காலை மாரடைப்பால் மரணமடைந் தார்.

சாந்தனை இலங்கைக்கு அழைத்துவர வேண்டிய கட்டாய நிலைமை தொடர்பில் சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி இந்திய அரசிடமும், இலங்கை அரசிடமும் கோரிக்கைகளையும் மன்றாட்டங்களையும் முன்வைத்த சந்தர்ப்பங்கள் ஒன்றல்ல, பத்தல்ல பலநூறு தடவைகள். ஆனால், அந்தக் கோரிக்கைகள் எவையும் இவ்விரு அரசுகளின் இரும்பு இதயங்களை இழகச்செய்யாத நிலையில், நோய்வாய்ப்பட்டு, நலிவடைந்து, உடல்குன்றி பலமிழந்து அவர் மரணமடைந்த செய்தி தமிழர் தாயகத்திலுள்ளோரின் இதயங்களில் இடியாக இறங்கியிருக்கின்றது.

மறதி ஒரு தேசிய வியாதியென்பர். தமிழ்த் தேசிய இனத்துக்கு அந்த வியாதி ஒப்பீட்டளவில் கொஞ்சம் அதிகம்தான். இந்திய உச்சநீதிமன்றம் சாந்தன் உள்ளிட்டவர்களை விடுவித்த பின்னர், அவர்களில் இலங்கையைச் சேர்ந்தவர்களின் சிறைவாசத்துக்குப் பின்னரான விடுதலைக்காக தாயகத்தினரும் தமிழ்த் தலைமைகளும் அவ்வளவு அலட்டிக்கொண்டதாக இல்லை. சாந்தனின் இறுதிக்காலத்தில் ஓரிரு வலியுறுத்தல்கள்- நகர்வுகள் எடுக்கப்பட்டிருந்தனவே அன்றி அதைத்தவிர்த்துவிட்டுப் பார்த்தால் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இவர்களின் விடயங்கள் பொதுவெளியில் பேசப்பட்ட சந்தர்ப்பங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இன்னும் வெளிப்படையாகச்சொல்வதாயின், தமிழ்த் தலைவர்கள் சிலர் 'இந்தியாவின் நலன்களைக் கருத்திற்கொண்டுதான் சீனத்தின் உறவைத் தீர்மானிக்க வேண்டும்' என்று வலியுறுத்தியிருந்த அளவுக்கேனும் சாந்தன் உள்ளிட்ட எம்மவர்களின் விட யத்தில் பேசா மடந்தைகளாக, 'கடைகெட்ட அரசியலை' இறுகப்பிடித்தபடிதான் இருந்தனர்.

தமிழர்கள் இரண்டு விடயங்களில் தீராப் பற்றுடையவர்கள். ஒன்று இறை, மற்றொன்று வினை. இவ்விரண்டும் நின்றுகொல்லும் தன்மைமிக்கன. ஆதலால், இந்தக் கொலைப்பழி சிங்கள பேரினவாத ஸ்ரீலங்கா அரசையும், காந்தியதேசம் என புளகாங்கிதம் அடைந்து கொள்ளும் இந்தியாவையும் வாழ்வுக்கும் வதைத்தே தீரும்.





# உட்கட்சி முரண்பாடு: விரக்தியில் தமிழர்கள்

## மன்னார் ஆயர் ஆதங்கம்

**மன்னார், பெப். 29**

**தமிழர் தாயகத்தில் இன்று ஏற்பட்டுள்ள உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடையச் செய்துள்ளன. இந்த முரண்பாடுகளால் பாதிப்படைவது மக்களே என்று ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ சுட்டிக் காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழர் தாயகத்தில் உட்கட்சி முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. இதனால் தமிழ் மக்கள் ஏமாற்றமும் விரக்தியுமுற்றுள்ளனர். ஆட்சியில் உள்ளவர்கள் தமது ஆட்சி அதிகாரத்தை தக்கவைப்பதற்குப் பல்வேறு காய்நகர்த்தல்களை முன்னெடுத்து வருகின்றனர்.
இந்தநிலையில் ஜனநாயக விழுமியங்கள் மதிக்கப்படவும் மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவும் தொடர்ந்து ஒன்றாகப் பயணிக்க வேண்டும்.
மன்னார் தீவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள 250 மெகாவாட் காற்றாலை சக்தி திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முனைப்போடு செயற்படுகின்றது. இதனை அரசாங்கம் கைவிடும் வரை அதற்கெதிராகப் போராடுவோம்- என்றார். (ச-60)

# அணுக்கதிர் வீச்சிலிருந்து இலங்கைக்குப் பாதுகாப்பு

பிராந்தியத்தில் ஏற்படும் எந்த அணுவிபத்திலிருந்தும் அணுக்கதிர் வீச்சிலிருந்தும் இலங்கையைப் பாதுகாக்கமுடியும் என இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல்சபை தெரிவித்துள்ளது.
நாடாளுமன்ற நிலையியல் குழு உறுப்பினர்களுக்கும் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபைக்கும் இடையே, நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. போதியளவு மனிதவளமும் உரிய உபகரணங்களும் இருப்பதால் அணுக்கதிர் வீச்சிலிருந்து இலங்கையை எந்தச் சந்தர்ப்பத்திலும் பாதுகாக்க முடியும் என அணுசக்தி ஒழுங்குபடுத்தல்சபை தெரிவித்துள்ளது. (ஒ-6)

# தென்னக்கோன் நியமனத்துக்கு எதிராக மனு!

கொழும்பு, பெப். 29
பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனத்துக்கு எதிராக ஏழு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
மனுக்கள் மீதான விசாரணை ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ளதாக உயர்நீதிமன்றம் மனுதாரர்களுக்கு அறிவித்துள்ளது. தேசபந்து தென்னக்கோனின் நியமனம் தொடர்பான நியமன அறிக்கை இன்னமும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ஒ-6)

# மருத்துவ நிபுணர் பதவி வெற்றிடம்

வவுனியா, பெப். 29
வவுனியா மாவட்டத்தில் பாலியல் தொற்று நோய் மருத்துவ நிபுணர் பதவி வெற்றிடமாகியுள்ளது.
வவுனியா மாவட்டத்தில் மேற்படி பதவிநிலையில் பணியாற்றிய மருத்துவர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளமையால், குறித்த பதவி வெற்றிடமாகியுள்ளது. (ஒ-125)

# மாந்தை கிழக்கு பிரதேச விவசாயக் குழுக்கூட்டம்

மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் விவசாயக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், இடம்பெற்றது.
திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் ராஜேஷ்கண்ணா கலந்துகொண்டு நெற்செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்களுக்கு எவ்வகையான மருந்துகளைப் பாவிக்கலாம் என்பது தொடர்பில் விளக்கமளித்துள்ளார். (ஒ-35)

## நாளை

01.03.2024
**வெள்ளிக்கிழமை**
**மாசி–18**

சுபநேரம் : 06.27 - 07.57
ராகுகாலம் : 10.57 - 12.27

## நாளொரு நல்வார்த்தை

எந்தத் தடையுமே இல்லாமல் ஒரு பாதை செல்கின்றது என்று அது எங்கேயும் போகவில்லை என்று தான் அர்த்தம்.

– பிராங்க்ளின் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்மக்கழிவு சேகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.29

அச்சுவேலி உப அலுவலகத்தில் இயங்கும் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில், உக்காத திண்மக்கழிவுகளைத் தரம்பிரித்து தினமும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணிவரை கையளிக்க முடியும் என வலி.கிழக்குப் பிரதேசசபையின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)


# மரண அறிவித்தல்

தோற்றம் · 29 · 11 · 1939



மறைவு · 26 · 02 · 2024

## திருமதி அனக்கிளற் யூலியானா

இல.41, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அனக்கிளற் யூலியானா கடந்த 26.02.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அகஸ்ரின் அனக்கிளற் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பிரான்சிஸ்-இமல்டா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற அகஸ்ரின் - சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செலின் சிறிமதி, நொயிலின் ஜெயமதி (ஆசிரியர்) மற்றும் ஜலின், அன்று சிறிதரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மரினா, விக்ரர், றெக்ஸ், காலஞ்சென்ற அலோசியஸ் மற்றும் சாள்ஸ், அஞ்சலினா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேரி கிறேஸ், காலஞ்சென்ற றூபிமொனிக்கா, அல்வினஸ், திரேசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற ஜோண் குலசேகரம் மற்றும் ஞானதாசன், புலோறன்ஸ் ஜயில்ஸ், ஜீவ ஆன்சலின் றஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனிபர், யூடித்தா, லுக்ரேஷியா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.03.2024) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் இருந்து பி.ப 3.00 மணிக்கு மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 755 9769

(CS 29386) A-1

# கண்ணீர் அஞ்சலி



கிராமிய பெருளாதார கூட்டுறவுத்துறை ஆய்வாளரும்,
வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் (NCDB) தலைவரும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான
கலாநிதி அகிலன் கதிர்காமர் அவர்களின்
பாசமிகு தாயார்

## திருமதி சகுந்தலாதேவி கதிர்காமர்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்,
இல.12, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை.

(CR 42004) S-1

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் · 15 · 07 · 1940



மறைவு · 28 · 02 · 2024

## திருமதி சகுந்தலாதேவி கதிர்காமர்

(Former Teacher-Jaffna College & Colombo C.M.S Ladies College, Former, Instructor-University Of Jaffna, Former Lecturer-Aoyama Gakuin University, Tokyo)


வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் மற்றும் எமது வங்கியின் ஆலோசகர் திரு அஜயன் கதிர்காமர் ஆகியோரின் அன்புத் தாயார் திருமதி சகுந்தலாதேவி கதிர்காமர் அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபங்களினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
கைதடி.

(CR 42002) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம் · 24 · 05 · 1940



மறைவு · 27 · 02 · 2024

## யோசேப்பு இராசநாயகம்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப்பு இராசநாயகம் நேற்றுமுன்தினம் (27.02.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப்பு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்தி - அன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற எட் வீசம்மா மற்றும் மேரி ஜெயாவின் பாசமிகு கணவரும், றெனோ றெனிதா (ஆசிரியை, யாழ்/ சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலை), றெனோ போல்டன் (சுவிஸ்), றெனோ ஸ்ரால்டன் (பிரான்ஸ்), றினோ யோகதீபன் (அரச நில அளவையாளர், மாங்குளம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், றெஜினோல்ட், ஸ்ரீபன், யசோ நெல்ஸ்மன் அனுசலா ஆகியோரின் பெரியப்பாவும், V.S. நேசகுமார் (இலங்கை வங்கி, பண்டத்தரிப்பு), லக்ஷினி (சுவிஸ்), வத்சலா (பிரான்ஸ்), ஜென்சி சிந்துஜா (ஆசிரியை, யாழ்/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) சுயேந்தினி, லூட்ஸ் சுமித்திரா, கமலச்செல்வம் ஆகியோரின் மாமனாரும், ஜுலி சோபினியா, ஜுலியட் டினோஷன், பிரன்ரன், பியான்ரன், ஜியோலின், கெய்ஷான் பிரக்மன் அபீனா, சௌமியா, சபானா, கெமிகன், கொட்வின், மினிசன், நியான் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதித் திருப்பலி பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நாளை (01.03.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பாத்திமா வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 07 . 1940



மறைவு 28 . 02 . 2024

### சகுந்தலா தேவி கதிர்காமர்

**(முன்னாள் ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி, கொழும்பு சீ.எம்.எஸ். மகளிர் கல்லூரி, முன்னாள் போதனாசிரியர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்னாள் விரிவுரையாளர் - யப்பான், டோக்கியோ அவோயமா ககுவின் பல்கலைக்கழகம்)**

கொழும்பினைப் பிறப்பிடமாகவும், நல்லூர், யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சகுந்தலா தேவி கதிர்காமர் நேற்று (28.02.2024) புதன்கிழமை நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி அரசரட்ணம் - பரிமளம் அரசரட்ணம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வண.ஜே. டபிள்யூ.ஏ. கதிர்காமர் - கிறேஸ் நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சாந்தசீலன் கதிர்காமர் (முன்னாள் சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இந்திரா ஜோர்ஜ், ஜெயசீலன் அரசரட்ணம் மற்றும் தர்மசீலன் அரசரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அஜயன் (கனடா), அகிலன் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரம்யா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மாமியாரும், அர்ஜுனா, நடீனின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று வியாழக்கிழமை (29.02.2024) பிற்பகல் 3.30 மணிக்கு 63, றக்கா ஒழுங்கை, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று திருவுடல் செம்மணி வீதியிலுள்ள சென் ஜேம்ஸ் ஆலய மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**63, றக்கா ஒழுங்கை,**
**நல்லூர்.**

**தகவல்:**
**அகிலன் கதிர்காமர்**
**071 153 1985**

(CS/54164) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 09 . 1960



மறைவு 28 . 02 . 2024

### வரதன் மேரிதிரேஷா (பாப்பா)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வரதன் மேரிதிரேஷா (பாப்பா) நேற்று (28.02.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருமேனி - சந்தனம் தம்பதியரின் அன்பு மகளும், வரதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, ஞானசோதி, மரியசீலன், குணசீலன் மற்றும் அலிஸ்றீற்றா, மேரி மெற்றிலின், இன்பராணி (அமெரிக்கா), வினிபிரட் (கனடா), சகாயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான யேசுதாசன், சோதிநாதன் மற்றும் ஞானரட்ணம், சிவராசா, புஸ்பராணி, யுகேந்திரம்மா (வவா), காந்திமதி (வவா - கனடா), பவானி, சந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் உரும்பிராய் கிழக்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று (29.02.2024) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 844 8742**
**077 034 1174**

(CS/54167) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 05 . 1953



மறைவு 28 . 02 . 2024

### துரைசிங்கம் இராசமணி

உடுவில் கிழக்கு, சோமராந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் இராசமணி நேற்று (28.02.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், ஜெயகிருஷ்ணன் (Telecom), ஜெயகௌரி (RDHS Jaffna), சசிகரன் (France) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஷ்பமலர், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தநாயகி, குலசேகரம் (France), காலஞ்சென்றவர்களான இராசமணி, நாகையா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருஷ்ணதாஸ், வரதரூபி, பிரியாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், அங்கவி, அனுவர்கன், பூர்வி, கேசவி, சர்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**சோமராந்தோட்டம்**
**உடுவில் கிழக்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**071 143 3508**
**077 633 1022**

(CS29379) N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 11 . 1931



மறைவு 27 . 02 . 2024

### கண்ணையா இரத்தினம்

மாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணையா இரத்தினம் நேற்றுமுன்தினம் (27.02.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கண்ணையா - தெய்வானை தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னு தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவபாலகிருஷ்ணன், அமிர்தலிங்கம், ஜெயலக்ஷ்மி, திருஞானம், தவராசா, றஞ்சினி, றாகினி, காலஞ்சென்ற அசோகன் மற்றும் யோகராசா, வரதன், பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தமனோகரி, சச்சிதானந்ததேவி, ஜெயரட்ணம், பபி, லக்ஷ்மி, காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் ருபாகரன், கலாஆனந்தி, தர்ஷினி, பபிலா, குணாளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

**தொடர்பு:**
**077 662 2064**

(CS54026) N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 • 08 • 1949



மறைவு
28 • 02 • 2024

## தர்மலிங்கம் தர்மஜெயசூரியர்

**(Rtd. Customer Services Manager, Bank of Ceylon)**

ஊரெழுவை பிறப்பிடமாகவும், அரச வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மஜெயசூரியர் நேற்று (28.02.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - ராணிநாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துரட்ணம்-தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ரோகிணிதேவியின் அன்புக் கணவரும், ரோகன்ராஜ், தேனுகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜித்தாவின் பாசமிகு மாமனாரும், டனஹரிஷ், சாக்ஷிஹரிணி, நிஹாரிஜா ஆகியோரின் பாசமிகு பேரனும், லிங்கநாயகம், காலஞ்சென்றவர்களான தர்மதுரை, தர்மசந்திரன் மற்றும் தர்மகுணலோசனா, தர்மகுணபூசனா, காலஞ்சென்றவர்களான தர்மகுணவதனா, தர்மகுணபவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னத்தம்பி, அருளானந்தன், சிவபாலசுந்தரம், சண்முகராஜா, விமலாதேவி, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சொர்ணலக்சுமி, பத்மாதேவி, மாலினிதேவி மற்றும் கமலாதேவி, தவரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் கனகரட்ணம், உமா ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற விமல்ராஜ் மற்றும் நிமல்ராஜ், விக்டர், மதனராஜா, மோகனராஜா, மாளவியா, ஸ்ரீவாணி, மோகனாஸ்ரீவாணி, அனுராகினி குகராஜ், ஜெனனி, உஷேந்தன், ஜெயந்தன், சுதாயினி, அனோஜா, நிரோஜா, சஜீவ் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், குமுதினி, அனுஷா, சிவநிதி, விக்னராஜ், யுஷாந்தி, தேனுகா, ஆரணி, தர்கினி, மோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.

த.ரோகினிதேவி (மனைவி) - 021 2230 785
த.ரோகன்ராஜ் (மகன்) - 077 175 8485
(Rohan Enterprise)
த.தேனுகன் (மகன்) - 077 8892 185

(CS 29388) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவுக்கு அனுப்புவதாக மோசடி பாணந்துறையில் பெண் கைது!

கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி 50 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாணந்துறை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பெண் மாலம்பே பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவர் கனடாவில் கணக்காளராகக் கடமையாற்றுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பில் பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு நான்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகச் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சந்தேகநபர் சுமார் 8 வருடங்களாக தலைமறைவாகி இருந்த நிலையில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கனடாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, லட்சக்கணக்கில் பணமோசடிகள் நாடளாவியரீதியில் அதிகரித்து வருகின்றன.

ஆதலால், இவ்வாறான ஏமாற்றுக்காரர்களின் மோசடிகளில் பொதுமக்கள் சிக்கிவிடாது விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும், இவ்வாறானவர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்குப் பகிரங்கப்படுத்தவேண்டும் என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ம)

# பஸில் நாடு திரும்புகிறார்

கொழும்பு, பெப். 29

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ச எதிர்வரும் 5ஆம் திகதி காலை 5 மணிக்கு நாடு திரும்பவுள்ளார்.

அரசியல் ரீதியிலான வியூகங்களை வகுத்துகொண்டே பஸில் ராஜபக்ச கொழும்பு வருகிறார் எனவும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வாகனத் தொடரணி மூலம் அவர் அழைத்துவரப்படுவார் எனவும் ராஜபக்ச குடும்பத்தின் பேச்சாளராகக் கருதப்படும் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

"ரணில் விக்கிரமசிங்கவை நாம் கொண்டுவந்திருந்தாலும் அவர் எமக்கு எதிராகவே செயற்படுகின்றார். மொட்டு கட்சியில் இருந்து ஒரு பிரிவை உருவாக்கியுள்ளார். இதனால் பஸில் ராஜபக்ச அதிருப்தியிலேயே அமெரிக்கா சென்றார். நாடாளுமன்றத் தேர்தலை இலக்குவைத்தே பஸில் வருகின்றார். பொதுத்தேர்தல்தான் முதலில் நடைபெறும் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன். ரணில் இதற்கு இணங்கிவிட்டார். தேர்தலை பஸில் ராஜபக்சதான் வழிபடுத்துவார். பஸில் ராஜபக்ச நாடு திரும்பியதும் வேட்பு மனு பொறுப்பேற்கும் நிகழ்வு இடம்பெறும்" - என்றார். (ஒ-44)

# இலவச வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப்.29

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் புராணபடனம், சமஸ்கிருதம், கதாப்பிரசங்கம் ஆகிய ஆறுமாதகால இலவசக் கற்கைநெறி வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் அந்தந்தப் பிரதேசங்கள், மாவட்டங்களில் ஆரம்பமாகவுள்ளன.

கலந்துகொள்ள விரும்புவர்கள் தங்கள் சுயவிபரத்துடன் விரும்பும் பாடத்தையும் எழுதி அந்தந்த மாவட்ட மற்றும் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் யா. அனிருத்தனன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகள் வடபிராந்தியம், குருகுலம், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம், என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



வவுனியா, மடுக்கரை பாடசாலையில் கற்கும் 22 விளையாட்டு வீரர்களுக்கான சீருடை மற்றும் காற்சட்டைகள் என்பன அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த திருமதி மேதினி பாலச்சந்திரனின் நிதிப்பங்களிப்பில் பாடசாலை அதிபரிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன. (ப-75)


## மகா சிவராத்திரி தினப்போட்டிகள்

எதிர்வரும் (08.03.2024) வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவுள்ள மகாசிவராத்திரி தின நிகழ்வை முன்னிட்டு, ஆதி ஞானவைரவர் ஆலயம், நாவற்குழிச் சந்தி நிர்வாக சபையினரால் பின்வரும் போட்டிகள் எதிர்வரும் (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை, 076 122 3927 எனும் Whats app இலக்கத்திற்கு பெயர், வயது, போட்டி என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

பிரிவு 1 (வயது 4.5.6.7)
திருக்குறள் (கடவுள் வாழ்த்து)
தேவாரம் - சம்பந்தர் தேவாரம்
பேச்சு - கல்வியின் பயன் (4-6 நிமிடம்)

பிரிவு 2 (வயது 8.9.10.11)
திருக்குறள் கடவுள் வாழ்த்து/ வான்சிறப்பு
தேவாரம் - புஜிசபுராணம் ஓதுதல் (பண்ணுடன்)
பேச்சு - இந்துப் பெண்மை (6-8 நிமிடம்)

பிரிவு 3 (வயது 12.13.14)
பேச்சு - சைவம் காத்த மங்கையர் திலகங்கள் (10 நிமிடம்)
கட்டுரை - இறைவழிபாடும் திருமுறைகளும் (150-200 சொற்கள்)
வினாவிடை - இந்துசமயம் சார் வினாக்கள் (40 வினாக்கள்)

பிரிவு 4 (வயது 15.16.17.18)
சிவபுராணம் பண்ணுடன் ஓதுதல்
கட்டுரை - இருபத்தோராம் நூற்றாண்டில் சைவமும் அது எதிர்கொள்ளும் சவால்களும்
வினாவிடை - சைவசமய வினாவிடை (60 வினாக்கள்)

வெற்றியீட்டும் மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் சிவராத்திரி தினத்தன்று ஆலயத்தில் வழங்கப்படும்.

(CS 99389) S-1



## பெறுகைகளுக்கான அழைப்பு நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்.

### சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவை - 2024 / 2025

1. தலைவர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள அலுவலகங்களுக்கு சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | பெறுகை இல. | சேவையின் விபரம் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01 | NP/30/02/04/CS/2024/2025 | சுத்திகரிப்பு சேவை | 100,000.00 |
| 02 | NP/30/02/04/SS/2024/2025 | பாதுகாப்பு சேவை | 150,000.00 |

2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   a. கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   b. அத்துடன், பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சினுடைய அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   c. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினை ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளர் அலுவலகத்தில் பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் 29.02.2024 ஆம் திகதி தொடக்கம் 13.03.2024 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.5000.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்கள் 14.03.2024 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு முன்பதாக ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க பொருத்தமான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பெறுகை முன்னுணர் கூட்டம் 11.03.2024 ஆம் திகதி காலை 11.00 மணியளவில் வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் நடைபெறும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

இ.குருபரன்
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா
மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021-205-7102 தொலைநகல் :- 021-205-7103

(cr.41899) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பப் பிணக்கைத் தீர்க்கச் சென்ற பொலிஸாருக்குக் கடி

குடும்பப் பிணக்கைத் தீர்த்து வைக்கச் சென்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடிகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தங்காலையில் முன்னாள் சிப்பாய் ஒருவர் தன்னைத் தாக்குவதாக அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாடு தொடர்பில் விசாரிக்க பொலிஸார் இருவர் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

சந்தேகநபரான சிப்பாய் மனைவியைத் தாக்குவதை அவதானித்த பொலிஸார் அதைத் தடுக்கச் சென்ற போது, அவர்கள் இருவரையும் அவர் கடித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர் போதைக்கு அடிமையானவர் என்றும் மனைவியின் மோட்டார் சைக்கிளை விற்க முற்பட்டபோது அதற்கு இடமளிக்காமையாலேயே அவர் தாக்குதல் நடத்தினார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-6)

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை
# எதிரணிகள் ஒன்றிணைவு

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதற்கு எதிரணியில் உள்ள மேலும் சில கட்சிகள் தீர்மானித்துள்ளன.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை என்பனவே இந்த முடிவை எடுத்துள்ளன.

நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்ட விடயத்தில் உயர்நீதிமன்ற பரிந்துரைகளையும், அரசமைப்பையும், நாடாளுமன்ற சம்பிரதாயத்தையும் சபாநாயகர் மீறியுள்ளார் எனச் சுட்டிக்காட்டி, அவருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்துள்ளது.

அதை ஆதரிப்பதற்கு அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தரலங்கா சபாகய என்பனவும் தீர்மானித்துள்ளன என்பது தெரிந்ததே.

(அ-எ-44)


## வேலையாட்கள் தேவை

கொழும்பில் அலுமினிய Fittings வேலைத் தலத்திற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

★ Casement Windows
★ 100mm Slidings Door
★ Kitchen Cupboards

சுயமாக செய்யக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

மாதச்சம்பளம் 80,000/-

(CR 42005) S-1

தொடர்பு: 077 879 6620

## தவறவிடப்பட்டுள்ளது

கடந்த **23.02.2024** அன்று தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் பகுதியில் ரகுதீபன் தமிழினி என்பவரின் வாகன சாரதி அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப்பத்திரம் ஆகியவை அடங்கிய கைப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும் அல்லது சந்நிதி கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கவும்.

நீர்வேலி, வீரபத்திரர் ஆலயம்,
நீர்வேலி தெற்கு.

(CS/29380) J-1

076 118 8546, 077 037 9004

## கண்ணீர் அஞ்சலிகள்



எமது ஆலய பரிபாலன சபையின் முன்னாள் பொருளாளரும், தற்போதைய பொருளாளர் திரு.த.ரோகன்ராஜ் அவர்களின் அன்புத் தந்தையுமான

**தர்மலிங்கம் தர்மஜெயசூரியர்**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.



எமது ஆலய பரிபாலன சபையின் முன்னாள் உபதலைவர்

**சின்னத்துரை நவரட்ணராஜா**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.



எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினர் திரு.தம்பையா ஞானசுந்தரம் அவர்களின் அன்பு மாமியார்


**சுப்பிரமணியம் கனகமணி**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்
உரும்பிராய்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 11 . 1938



இறப்பு 28 . 02 . 2024

### இ.கிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற M.L.T. யாழ். போதனா வைத்தியசாலை, முன்னாள் சிற்றூர்தி இணையங்களின் தலைவர், LIONS கழக உறுப்பினர், அச்சுவேலி மத்திய சனசமூக நிலைய தலைவர், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை நலன்புரி சங்க நிர்வாக உறுப்பினர்)

அச்சுவேலி பயித்தோலையை பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் கிருஷ்ணன் நேற்று (28.02.2024) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் அம்மாக்குட்டி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற செல்லப்பா செல்வராசு தம்பதியரின் மருமகனும், அருந்தவ ராணியின் அன்புக் கணவரும், வாசினியின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கந்தசாமி, சின்னத்தம்பி, சின்னராசு, பாலசிங்கம், சுப்பிரமணியம், நடராஜா, சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி தெற்கு அன்னாரின் துவாரகை இல்லத்தில் இன்று (29.02.2024) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"துவாரகை"
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்

## மரண அறிவித்தல்



### வேதநாயகம் சில்வா

(ஓய்வுபெற்ற மேலதிக பிரதி விவசாய பணிப்பாளர், வடக்கு – கிழக்கு மாகாணம், ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - இலங்கை விவசாய கல்லூரி, குண்டசாலை)

திருகோணமலை கும்புறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பலாலி வீதி உரும்பிராய் தெற்கை நிரந்தர வதிவிடமாகவும், இல.160(80), கண்டி வீதி, சுண்டிக்குளியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வேதநாயகம் சில்வா அவர்கள் நேற்று (28.02.2024) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேரிஸ் டீ சில்வா, மேரி சாந்தம்மா ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பு டேவிட் ஜெயரட்ணம், சுகந்தராணி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவரான ஜொய்ஸ் பத்மினி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவரான டேவிட் தேவநாயகம் அவர்களின் அன்புச் சகோதரனும், டானியல் விமல்ராஜ் (நோர்வே), துசீதரன் (அதிபர்- சென் ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்) மற்றும் ரூத் அனித்தா (ஆசிரியை- உரும்பிராய் தூய இம்மானுவேல் ஆலய முன்பள்ளி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆன் கத்ரின் (நோர்வே), துஷ்யந்தி (அதிபர்- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), சசிஆனந் (நிர்வாக உத்தியோகர்- Sierra Telecom Division- Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும், எலிசபெத், ஷேரன் திவ்யா, எலியாஸ், தபித்தா ஷானியா, அந்திரேயாஸ், ஒசேயா ருத்ஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இல.160(80), கண்டி வீதி, சுண்டிக்குளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, இராசவீதி, கோப்பாயில் அமைந்துள்ள பரி. இம்மானுவேல் ஆலய சேமக் காலையில் சரீரம் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V.S.B.துசீதரன் (மகன்)
0777 283616


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நளினி,...

சாந்தனின் உடலுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட, தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி விடுதலையான நளினி மற்றும் பேரறிவாளன் ஆகியோரும் சாந்தனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

சாந்தனின் உடலை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## சாந்தன்...

இவரது மறைவு தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு, தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர் சாந்தன். இவருக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இவரையும் இதே வழக்கில் தண்டிக்கப்பட்டிருந்த நளினி, முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோரையும் இந்திய உயர் நீதிமன்றம் இந்திய மத்திய அரசாங்கத்தின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் விடுவித்தது.

தமிழகத்தைச் சேர்ந்த நளினி மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய இருவரும் விடுதலையை அனுபவித்தாலும் சாந்தன், முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் திருச்சி மத்திய சிறைவளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தனிமைச் சிறையில் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டனர். தங்களுக்குத் தற்காலிகப் பயண ஆவணங்களை வழங்கி, தங்களை விரும்பும் நாடுகளுக்கு அனுப்பவேண்டுமென நால்வரும் கோரிக்கை விடுத்திருந்தபோதும், அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இலங்கை திரும்புவதற்கான அனுமதி வழங்கக்கோரி சாந்தன் சென்னை உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அதேநேரம் யாழ்ப்பாணம், உடுப்பிட்டியிலுள்ள சாந்தனின் தாய், தனது மகனை இலங்கைக்கு அனுப்பக்கோரி இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு 7க்கும் மேற்பட்ட கடிதங்களுடன், சாந்தனின் பிறப்புச் சான்றிதழ் உட்பட கோரப்பட்ட ஆவணங்களையும் அனுப்பியிருந்தார். ஆனால், சாந்தனை இலங்கைக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் இரு நாட்டு அரசாங்கங்களாலும் தாமதிக்கப்பட்டிருந்தன.

சாந்தன் தனக்குத் தற்காலிகப் பயண ஆவணங்களைக் கோரிவந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழக்கிழமை, அதாவது பெப்ரவரி 23 ஆம் திகதி வெளிநாட்டவருக்கான பிராந்திய பதிவு அலுவலகத்தில் இருந்து பயண ஆவணங்கள் வழங்கப்பட்டன. இதையடுத்து அவரை இலங்கைக்கு அனுப்புவதற்கான பணிகள் தீவிரமடைந்தன. அவர் நேற்று இரவு விமானம் மூலம் இலங்கை திரும்புவதற்கான ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

32 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தனுக்குப் பல உடல்நலப் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. அவர் விடுவிக்கப்பட்ட பின்னரும் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தனுக்கு நடைப்பயிற்சிக்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டிருந்ததால், அவருக்கு கல்லீரலில் ஏற்பட்டிருந்த பாதிப்பு மோசமான நிலையை எட்டியது. சிகிச்சைக்காக அவர் திருச்சியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரது உடல்நிலை தொடர்ந்து மோசமடையவே, அவர் சென்னையில் உள்ள ராஜீவ்காந்தி அரசு தலைமை மருத்துவமனையில் கடந்த ஜனவரி 27 ஆம் திகதி சேர்க்கப்பட்டார். நேற்றுக்காலை 7.50 மணியளவில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

அவரது உடலை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - சாந்தனின் உடல் இன்று பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக அவரது சொந்த இடத்துக்குக் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் தீர்மானிக்கப்படும் என்று உறவினர்கள் தெரிவித்தனர். (அ-எ-26-100)

## தமிழரசுக்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பாக யாழ்ப்பாணத்தில் மூத்த சட்டத்தரணி ந.சிறீகாந்தாவும், திருகோணமலையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவும் முன்னிலையாகவுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு கடந்த 19 ஆம் திகதி நடைபெறும் என்று கூறப்பட்டிருந்தநிலையில், அதற்குத் தடை விதிக்கக்கோரி யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் இருவேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவில் கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளின் தொடர்ச்சியாகவே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான பீற்றர் இளஞ்செழியன் யாழ்ப்பாணத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணைகள் கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றன.

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் ச.குகதாசன் மற்றும் குலநாயகம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான யோகேஸ்வரன் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

திருகோணமலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை உறுப்பினர் சந்திரசேகரம் பரா என்பவர் மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணைகள் திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் நடைபெற்றன.

மனுக்களை விசாரித்த நீதிமன்றங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு இடைக்காலத் தடை விதித்ததுடன், வழக்கை இன்றுவரை ஒத்திவைத்தன. இந்த இரு வழக்குகளுமே இன்று யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (அ-எ)

## அதிகாரப்...

வைத்துத் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் பங்களிப்புடன் புதுடில்லியில் நடைபெற்ற புவிசார் அர சியல் மற்றும் பொருளாதாரக் கலந்துரையாடல் சபையில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகரித்த போர்ச்செலவு அபிவிருத்திக்குத் தடையாக இருந்தது. 1985இல் எங்களின் பாதுகாப்புச் செலவு 188 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. ஆனால், 2008இல் போரின் முடிவில் இந்தச் செலவு 1.5 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்தது.

சில சமூகங்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டியமை அவர்கள் ஆயுதம் ஏந்த வழிவகுத்தது. வளர்ச்சி என்பது சமூகத்தின் சில பிரிவுகளுக்கு மட்டுப்படுத்தப்படமுடியாது. அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளவேண்டும். நாம் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளாவிட்டால், பெரும்பான்மைவாதம் என்ற துருப்புச் சீட்டை, அரசியல்வாதிகள் பயன்படுத்தி, குறிப்பிட்ட சமூகங்கள் மற்றும் பிரிவினரின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பார்கள். இது கவனிக்கப்படவேண்டும். இது நிலையான வளர்ச்சியைக் கொண்டிருக்கவேண்டும் என நான் நினைக்கிறேன் - என்று அவர் அந்தக் கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## அரசியல்...

நேற்றுத் தெரிவித்தார். பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது பற்றி தமிழ்க் கட்சிகள் (வடக்கு) அவதானம் செலுத்தி வருகின்றன. இந்தக்கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மலையகத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் எம்முடன் இணக்கத்துக்கு வந்துள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. கூட்டணி அமைத்தே நாம் களம் இறங்குவோம். அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் இணைத்துக்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-எ-44)

## கொன்சியூல்...

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், மக்களின் தேவைகள் உட்படப் பல விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் விளக்கமளித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என்று கொன்சியூல் ஜெனரல் சாய் முரளி இந்தச் சந்திப்பில் வடக்கு ஆளுநருக்கு உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இளைஞர், யுவதிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கவும், தீவுகளுக்கான படகுச் சேவையை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கான வசதிகளை ஒழுங்கு செய்வதுடன், தரை மற்றும் கரையோரத் தூய்மைத் திட்டத்துக்குத் தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். தூய்மைத் திட்டத்துக்குத் தேவையான நிதியை இந்திய துணைத் தூதரகத்திலிருந்து ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் இந்தச் சந்திப்பில் உறுதியளித்துள்ளார். (அ-எ-26)

## உடைமையில்...

கைது செய்யப்பட்டுள்ளார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 165 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 3 ஆயிரத்து 900 மில்லிகிராம் ஹெரோய்ன் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், இவற்றை விற்பனை நோக்கத்துடன் வைத்திருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (அ-எ-113)

## இந்தியாவுக்கும்...

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடக சந்திப்பு நடத்திய அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்ததாவது:-

சாந்தனின் மரணத்துக்கு இந்திய - இலங்கை அரசுகளும் தமிழ்த் தலைமைகளுமே பொறுப்பேற்கவேண்டும். கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை நல்லிணக்க அடிப்படையில் ஒரே இரவில் பேச்சுவார்த்தை மூலம் விடுதலை செய்ய முடியும் என்றால் ஏன் சாந்தனை உடன் விடுதலை செய்ய முடியாமல் போனது? அதேநேரம், இலங்கையில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றார். (அ-எ-66)

## மின்சாரம்...

சுன்னாகம், மயிலணி வடக்கில் குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

தேவராசா கமல்ராஜ் (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.

வீட்டின் மின்கட்டணம் செலுத்தாததால் கடந்த 26ஆம் திகதி மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் நேற்றுமுன்தினம் இரவு அயல் வீட்டில் இருந்து மின் இணைப்பைப் பெற்று மோட்டரை இயக்க முற்பட்டுள்ளார். இதன்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சம்போக்கச் செல்லவில்லை உயிரைக் காக்கவே சென்றோம்

## கடற்றொழில் கூ.ச.சமாச உப தலைவர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப். 29**

**ஈழத்தமிழர்கள் உயிரைப் பாதுகாக்கவே தமிழ்நாட்டுக்கு அகதிகளாக தஞ்சமடைந்தார்களே தவிர சோற்றுக்கு வழியில்லாமல் பஞ்சத்தில் அல்ல என வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச உபதலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

எங்கள் வரிப்பணத்தில் நாங்கள் போடும் பிச்சையில் வாழ்ந்து கொண்டு எங்களுக்கு எதிராகச் செயற்படுவதாகவும், ஈழத் தமிழ் மீனவர்களது பிறப்பையே கேள்விக்குள்ளாக்கும் வகையிலும் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர் சங்கத் தலைவர் எமரிட் தெரிவித்த கருத்து சர்ச்சையாக உருவெடுத்துள்ள நிலையில் அதற்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பது சட்டத்தை மீறி எல்லை தாண்டியமைக்காகவே. அதற்கும் கச்சதீவுத் திருவிழாவுக்கும் என்ன தொடர்பு? தமிழ்நாட்டில் உள்ள கரையோர மாவட்டங்களின் எல்லைக்குள் ஏனைய மாவட்ட மீனவர்கள் கூட எல்லைதாண்டிச் செல்லமுடியாதவாறு அங்கு சட்டம் உள்ளது. உங்கள் பக்கத்து மாவட்ட எல்லைகளை கடப்பதே சட்டப்படி தடைசெய்யப்பட்டிருக்கும்போது நாட்டின் எல்லை தாண்டி வருவதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

தடைசெய்யப்பட்ட இழுவைமடியைப் பயன்படுத்தி தமிழக கடல்வளத்தை அழித்துவிட்டு, தற்போது எங்களுடைய கடல் வளத்தை அழித்து எங்களுடைய வாழ்வாதாரத்தையும் அழித்துக் கொண்டு வயிற்றுப் பிழைப்புக்காக வருவதாகக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எங்களுடைய போராட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும். எங்களது போராட்டத்தை கொச்சைப்படுத்தி கருத்துகளை கூறியது வேதனையாக உள்ளது. எங்களுடைய மக்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே தமிழ்நாட்டுக்கு அகதிகளாக சென்றார்களே தவிர சாப்பாட்டுக்கு வழியில்லாமல் வரவில்லை. அப்படி இருக்கும் எங்களது மக்களைக் கொச்சைப்படுத்தி பேசியிருப்பது மனிதாபிமானமற்ற வேதனையளிக்கும் செயலாகும் - என்றார். (ஓ-100)

### மதுபானசாலைக்கு மக்கள் எதிர்ப்பு

பூந்தோட்டத்தில் ஏற்கனவே மதுபான சாலை உள்ளநிலையில் புதிதாக மதுபான சாலை அமைக்க முயற்சிக்கப்பட்டு வரும் நிலையில் மக்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். புதிய மதுபானசாலைக்கு அனுமதி வழங்கவேண்டாம் என பூந்தோட்டம் வர்த்தக சங்கத்தால் பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகத்திடம் மனுக் கையளிக்கப்பட்டுள்ளது. (ஓ-110)

### தனியார்...

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் என்பன நேற்று சேவையில் இருந்து விலகியிருந்தன. உள்ளூர் தனியார் பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன.

வெளிமாவட்டங்களுக்குச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குப் பின்புறமாக வுள்ள வீதியிலேயே தரித்து நின்று சேவையில் ஈடுபடுகின்றன.

இதனால் அந்த வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது வழமை.

இவற்றைக் கருத்தில்கொண்டு, புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு உடன்பட மறுத்தே வெளிமாவட்டங்களுக்குச் சேவையில் ஈடுபடும் தனியார்பஸ்கள் சேவையில் இருந்து விலகியுள்ளன.

புதிய பஸ் நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபடவேண்டுமானால், இ.போ.ச. பஸ்களும் அங்கிருந்து சேவையில் ஈடுபடவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். தனியார் பஸ்களின் திடீர்ச் சேவை விலகலால், பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். (அ-எ-20)


## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில்
வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 986 5457


## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 04 . 1934



உதிர்வு 27 . 02 . 2024

முருகேசு கந்தசாமி

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், பலாலி கிழக்கை வதிவிடமாகவும் பன்னாலை தெல்லிப்பளையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி அவர்கள் நேற்று முன்தினம் (27.02.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2024) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு அவரது இல்லத்தில் (பன்னாலை) இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பன்னாலை, தெல்லிப்பளை.**
**077 101 6296, 077 345 0009** (CS 29392) S-1

**தகவல்: குடும்பத்தினர்.**

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி வர்த்தக சங்கப் பொதுக் கூட்டத்தில்தலைவராக ம.விவேகானந் தன், செயலாளராக தி.தங்கவேல், பொருளாளராகக.குமாரவடிவேல், நிர்வாகசபை உறுப்பினர்களாக மேலும் 23 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (ப-9)


**Teacher wanted for personal class**

Looking for a Qualified teacher to teach cambridge Syllabus for Grade 1 Student.

076 122 3927

> பௌதிகவியல்-மீட்டல்
> A/L 2024 (Day)
மாணவர்களிற்கானது


By M. கருணாநிதி BSc (Hons)
> NEW SCIENCE COLLEGE, JAFFNA
> PHYSICS WORLD ARIYALAI
ஆரம்பம்: 02/03/2024 சனி 11.30 AM ஆங்கில, தமிழ் மொழிமூலம்
அனுமதிகள்
SCIENCE HALL - 077 618 3064

**பராமரிப்பாளர் தேவை**

சிறுவர் இல்லத்தின் பிள்ளைகளை தங்கியிருந்து பராமரிப்பதற்கு
**ஆண் பராமரிப்பாளர்கள்,**
**ஆண் சமையலாளர்கள் தேவை.**
**35 - 50 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.**
(CS/54168) J-1 கரந்தன், நீர்வேலி.
தொடர்பு:- 077 728 3778


## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 01 . 1929



மறைவு 28 . 02 . 2024

சுப்பையா சரஸ்வதிப்பிள்ளை

பெரிய நாவலடி கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் படித்த மகளிர் திட்டம் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சரஸ்வதிப்பிள்ளை அவர்கள் நேற்று (2024.02.28) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா அவர்களின் அன்பு மனைவியும் அமரர் கமலாதேவி மற்றும் அன்னபூரணம், அகிலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமசிவம், விநாயகமூர்த்தி, சிறீஸ்கந்தராசா ஆகியோரின் மாமியாரும் ரமேஸ் பாமினி, காந்தி சியாமினி, பகிரதன் வினோதினி, இராசதுரை மதிவதனி, சத்தியேந்திரன் மாலினி, பிரதீபன் கௌரி, சசிதரன் தர்சினி, லிங்கம் சுரேகா, சுரேன் சுபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டர்சிதன், றாகவி, கம்ஷவி, அபிஷயன், டனுஜா, நிவேதன், நிஷானி, வியாசினி, அஜய், ஆதி, கீர்த்தனி, ஆர்த்தனி, அஸ்வின், ஆரூன், அஞ்சலி, ஆதிகா, சேந்தன் ஆகியோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (2024.02.28) புதன்கிழமையன்று பி.ப 2.30 மணியளவில் நடைபெற்று எழுதுமட்டுவாழ் வடக்கு இந்து மயானத்தில் உடல் தகனம் செய்யப்பட்டது.

**படித்த மகளிர் திட்டம்,**
**மிருசுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 900 7842, 076 676 2675** (CR 42003) V-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 29.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org